# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2016

## 2016/02

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபம்

**காலம்** :- 21.03.2016 (திங்கட் கிழமை) காலை 10.00 மணி

**சமுகமளித்த கல்வி ஆலோசனைக் குழுவினர் :-**

- கௌரவ திரு.த.குருகுலராசா – வடக்கு மாகாண கல்வி அமைச்சர். (தலைவர்)
- கௌரவ திரு.பா.கஜதீபன் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.சி.அகிலதாஸ் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.இ.இந்திரராசா – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.

**சமுகமளித்த வடக்கு மாகாண சபை கௌரவ உறுப்பினர்கள்**

- கௌரவ திரு.அ.பரஞ்சோதி – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.வே.சிவயோகன் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ச.சுகிர்தன் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ப.அரியரத்தினம் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ஆ.சி.து.ரவிகரன் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.எம்.பி.நடராஜ் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்.

**சமுகமளித்த ஏனையோர்**

- திரு.இ.இரவீந்திரன் - செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.கு.பிரேமகாந்தன் - மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம்.
- திரு.தி.ஞானசுந்தரன் - பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), மா.க.அமைச்சு
- திரு.கே.முகுந்தன் - விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திருமதி.S.வனஜா – உதவிப் பணிப்பாளர், கலாசாரத் திணைக்களம், வடமாகாணம்.
- திரு.கு.விக்கினரூபன் - பணிப்பாளர், மும்மொழிக் கற்கை நிலையம்
- திரு.ஆ.ந.இராசேந்திரன் - பொதுசன தொடர்பு உத்தியோகத்தர், முதலமைச்சர் அலுவலகம்.
- செல்வி ஜெயா தம்பையா – பணிப்பாளர், ஆரம்பப் பிளிளை அபிவிருத்திப் பிரிவு, மா.க. அமைச்சு

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று ஒரு நிமிட மௌன வணக்கத்துடன் கூட்டத்தை ஆரம்பித்தார்.

# 23.02.2016 ஆந் திகதிய அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்

## ➢ பாடசாலை தரமுயர்த்தல்

பாடசாலை தரமுயர்த்தல், புதிய பாடசாலைகள் ஆரம்பித்தல், புதிய வகுப்புக்கள் ஆரம்பித்தல், பாடசாலை பெயர் மாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளினை இனிவரும் காலங்களில் அந்தந்த வலயக் கல்விப்பணிபப்பாளரூடாக மாகாண கல்விப்பணிப்பாளரிற்கு சமர்ப்பித்து மாகாண கல்வித் திணைக்கள கட்டமைப்புக் குழுவின் பரிந்துரைகளினடிப்படையில் உரிய முடிவுகளை எட்டமுடியும் எனவும் இவ்விடயங்கள் தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படின் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆராய்வது சிறந்தது என கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.
மேற்படி விடயங்களை மேற்கொள்ளும் போது ஆளணி தொடர்பின் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாகவும் வட மாகாண பாடசாலை தொடர்பிலான ஆளணி விபரங்கள் தயாரிக்கப்பட்டு திறைசேரியில் முகாமைத்துவ சேவைகள் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான அனுமதி கூடிய விரைவில் கிடைக்கவுள்ளது எனவும் அனுமதி கிடைத்தபின் மேலதிக ஆளணியினை கோருவது சாத்தியமற்ற விடயமாதலால் பாடசாலைகள் தரமுயர்தல் விடயத்தில் கூடியளவு கவனம் எடுக்கப்பட வேண்டும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார். அத்துடன் தழுவு அனுமதி எதிர்பார்த்து இல் தரமுயர்த்தல், பாடசாலைகள் மீள ஆரம்பித்தல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளரிற்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. மன்/மூன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலை தரம் 10 ஆம் 11 ஆம் வகுப்புகள் ஆரம்பித்தல் - அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. வ/செக்கட்டிப்புலவு அ.த.க. பாடசாலை தரம் 10 ஆம் 11 ஆம் வகுப்புகள் ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
3. வ/சமளங்குளம் அ.த.க. பாடசாலையில் தரம் 06 ஆரம்பித்தல் - அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
4. மன்/தலைமன்னார் அ.மு.க பாடசாலையில் தரம் 06 ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
5. மன்/முசலி அகத்தி முறிப்பு அ.மு.க. பாடசாலையில் தரம் 06 தொடக்கம் தரம் 09 வரை ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## ➢ மீள ஆரம்பித்தல்

1. யா/காரைநகர் இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலை – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## ➢ புதிய பாடசாலை ஆரம்பித்தல்

1. மன்னார் கணேசபுரம் இந்திய வீட்டுத் திட்டம் பகுதியில் ஆரம்பப்பிரிவு ஆரம்பித்தல் - அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- **தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

தொண்டராசிரியர் தொடர்பில் மத்திய அமைச்சருடன் விரைவில் கலந்துரையாடப்பட்டு முடிவு எட்டப்படவுள்ளதாக கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தொண்டராசிரியர் விடயத்தில் அதிக காலம் செலவிடப்பட்டுள்ளதாகவும் விரைவில் இப்பிரச்சினைக்கு முடிவு எட்டப்படவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு இ.இந்திரராசா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தொண்டராசிரியர் தொடர்பில் ஏற்கனவே A,B,C என மூன்று பிரிவுகளாக பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் பின்னர் விடுபட்ட ஆசிரியர்களது பெயர்களை உள்ளடக்கி புதிய பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்ட போது பட்டியலில் பாரியளவு வேறுபாடு காணப்படுவதாகவும் தொண்டராசிரியர் பட்டியலில் உள்ளவர்களில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கில பாடங்களை சார்ந்தோர் மிகக் குறைவாகவே உள்ளதுடன் ஆரம்பக்கல்வி , சமயம் போன்ற பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களே அதிகமாக உள்ளனர் என செயலாளர் தெரிவித்தார்.

தொண்டராசிரியர் பெயர்ப் பட்டியலினை ஒவ்வொரு வலயக் கல்விப் பணிமனையிலும் பாடசாலைகளிலும் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் இதன் மூலம் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்தி முடிவுகளை எட்டுவது சிறந்தது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு ச.சுகிர்தன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தொண்டராசிரியர்களாக கடமையாற்றாத பலர் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் அனுதியுடன் செயலமர்வுகளில் கலந்து கொண்டு சான்றிதழ்களை பெற்றிருக்கின்றார்கள் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு ப.அரியரத்தினம் அவர்கள் தெரிவித்தார்.

இறுதியாக பெயர்ப்பட்டியல் வலயக் கல்வி அலுவலகத்திலும் கோட்டங்களிலும் பாடசாலைகளிலும் காட்சிப்படுத்துவது எனவும் பெயர்ப்பட்டியல் தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின் தெரியப்படுத்துமாறு கோருவது எனவும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களிற்கு பிரதிகள் அனுப்பி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நியமனத்தின் போது போட்டிப் பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு பரீட்சை மூலம் நியமனம் வழங்காது தகுதி அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கும் நியமனத்தின் பின் தகுதிகாண் பரீட்சைகளை பூர்த்திசெய்வது கட்டாயமானது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

- **புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது**

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. கௌவர முதலமைச்சர் இவ்விடயம் தொடர்பில் பாடசாலைகளை வட மேல் மாகாண சபைக்கு கையளிப்பதே சிறந்தது என கருத்து தெரிவித்ததாகவும் கௌரவ அமைச்சர் ரிசாட் பதியுதின் அவர்கள் 03 வருடங்கள் இவ்விடயத்தை பிற்போடுமாறு கேட்டுக் கொண்டதாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இறுதியாக 2016.12.31 இல் புத்தளத்தில் இயங்கிவரும் பாடசாலைகளை வடமேல் மாகாண சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## ➢ விளையாட்டு தொடர்பானது

1. மாகாண ரீதியில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் , பயிற்றுவிப்பாளர்களிற்கு இடமாற்றங்கள் , பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு உத்தியோகத்தர்களிற்கு விண்ணப்பித்தவர்களில் ஒருவர் மீது வழக்கு ஒன்று நீதிமன்றில் இடம்பெறுவதால் அவருடைய நியமனம் நிறுத்தப்பட்டது தொடர்பில் தற்போது வழக்கு முடிவடைந்து நிரபராதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
2. தேசிய ரீதியிலான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று வெளிநாடுகளில் போட்டிகளில் கலந்து கொள்ள செல்லும் வீர வீராங்கனைகளிற்கு நிதி உதவிகள் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு மாகாண சபை நிதி ஒதுக்கீடுகளில் விசேடமாக நிதி ஒதுக்கீடுகள் இல்லாமையால் பல சிரமங்களை எதிகொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
3. வல்வெட்டித்துறையில் சர்வதேச ரீதியில் நீச்சல் தடாகம் அமைப்பது தொடர்பில் - வேலைகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

## ➢ கலாசாரம் தொடர்பாக

1. பாடசாலை மட்டத்தில் எமது கலாசார முறையில் இன்னிய வரவேற்புகளை மேற்கெள்ளுதல் - இன்னியம் தொடர்பான புதிய முறைகள் பற்றி ஆசிரியர்களிற்கு விசேட பயிற்சிகள் வழங்குவதற்கு, செயலமர்வுகள் மூலம் பேராசிரியர் மௌனகுரு அவர்களைக் கொண்டு வழங்குவதற்கு தீர்மானிக்கப்படது.
2. கலாசார உத்தியோகத்தர்கள் இடமாற்றம் தொடர்பில் இடமாற்ற பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மே மாதம் 02 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படும்.
3. பண்டாரவன்னியன் சிலை அமைப்பது தொடர்பில் குதிரையினை தவிர்த்து வாளேந்திய பண்டாரவன்னியன் சிலை உருவாக்குவதற்கும் வீதியின் முச்சந்தியில் சிலை அமைப்பதற்கு அனுமதி கிடைக்காமையினால் முல்லைத்தீவு செயலக வளாகத்தில் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.
4. கலாசார உத்தியோகத்தர் நியமனம் தொடர்பில் கடமையேற்காத 04 பேருக்கு பதிலாக புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

## ➢ வேறு விடயங்கள்

1. துணுக்காய் வலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்த நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வு பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிகழ்வு நடைபெற்றது முறையற்றது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு அ.பரஞ்சோதி அவர்கள் தெரிவித்தார்.

   தொழிற் சங்கங்களும் துணுக்காய் வலய ஆசிரியர்களும் ஓர் போராட்டத்தை முன்னெடுத்ததன் காரணமாக குறித்த தினத்தில் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறவில்லையெனவும் சத்தியப்பிரமாண நிகழ்வு மட்டுமே நடைபெற்றதாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

   துணுக்காய் வலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் ஆசிரியர்களிற்கும் இடையிலே சுமுகமான உறவு இல்லாமையினால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைவதாகவும் உடனடியாக இப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும்

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு இ.இந்திரராசா அவர்களும் மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு பா.கஜதீபன் அவர்களும் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த செயலாளர் அவர்கள் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை நேற்றைய தினமே கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அறிக்கையின் பிரகாரம் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை கூடிய விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் 28.03.2016 இற்கு முன்னர் தீர்வு எட்டப்படும் எனவும் ஆசிரியர்களின் போராட்டத்தை தவிர்க்குமாறு தொழிற் சங்கங்களை கேட்டுக் கொண்டதாகவும் ஆனால் அவர்களினால் எமது கோரிக்கை கருத்தில் கொள்ளப்படாமல் போராட்டம் இடம்பெற்றதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தொடர்பிலும் ஆசிரியர்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் போராட்டங்களில் ஈடுபடும் எக்கட்சியினருக்கும் ஊக்குவிப்புகள் வழங்கக் கூடாது எனவும் இந் நடவடிக்கைகளால் மாணவர் கல்வி பாதிப்புக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் தெரிவித்தார்.

குறித்த தினத்தில் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள ஆசிரியர்கள் சென்றமையினால் பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளானமை பாரதூரமான விடயமாகும் என்றும் இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறித்த ஆசிரியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பெற்றோரும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளதை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு ஆ.சி.து.ரவிகரன் அவர்கள் தெரிவித்தார்.

துணுக்காய் வலயத்தில் காணப்படும் பிரச்சினை போல எதிர்காலத்தில் ஏனைய வலயங்களில் நடைபெறாதிருக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர்களாகிய திரு.பா.அரியரத்தினம் அவர்களும் திரு சி.அகிலதாஸ் அவர்களும் கேட்டுக் கொண்டனர்.

2. கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.அ.அஸ்மின் அவர்களின் கோரிக்கை தொடர்பில் - யா/கஜீதா முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் குடும்பங்களை வெளியேற்றுதல் - பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

3. நாச்சிக்குடாவில் முஸ்லிம் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பில் ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

4. அச்சுவேலி காணியினை கையளித்தல் - கிறிஸ்தவ சபைகளினால் பல பாடசாலைகள் இயங்குவதற்காக காணிகள் கையளிக்கப்பட்டதாகவும் தற்போது குறித்த காணிகளில் பாடசாலை இயங்காதவிடத்து மீளக் கையளிக்குமாறும் கேட்டுள்ளனர். ஓர் குழுவினை அமைத்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. கிளிநொச்சி, வலிகாமம் வலயங்களை இரண்டாகப் பிரித்தல் - 120 புதிய ஆளணியினை உருவாக்க வேண்டிய நிலை ஏற்படும் என செயலாளர் தெரிவித்தார். அத்துடன் குறிப்பிட்ட வலயங்கள் தொடர்பில் கட்டமைப்பு அறிக்கைகளை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

6. முல்லைத்தீவு மாவட்டத்தில் குறை நிலையிலுள்ள 04 பாடசாலை கட்டடங்களை முடிவுறுத்தல் தொடர்பில் உடுப்புக் குளம் பாடசாலை கட்டட வேலைகள் முடிவுற்றுள்ளதாகவும் ஏனைய இரணைப்பாலை றோ.க.தா.க பாடசாலை, பாரதி

வித்தியாலயம், முறிப்பு அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளின் குறை நிலை வேலைகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்படும்.

## ➢ பாடசாலைகள் தரமுயர்த்தல்

1. மன்/அகத்திமுறிப்பு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை தரம் 10 , 11 ஆரம்பித்தல் - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
2. M/Ehatugaswewa School, Welioya - மாகாண கல்விப் பணிப்பாளர் அறிக்கை கோரப்பட்டள்ளது.
3. யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை தரம் 10 ஆரம்பித்தல் - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
4. வ/சமளங்குளம் அ.த.க. பாடசாலை தரம் 06 ஆரம்பித்தல் - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
5. மன்/அல் பஜீா் ஆரம்ப பாடசாலையினை மீள மன்/எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்துடன் இணைத்தல் - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
6. வ/செக்கட்டிப்புலவு அ.த.க பாடசாலை - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டள்ளது.
7. வ/அறபா வித்தியாலயம் கலை, வர்த்தக பிரிவு ஆரம்பித்தல் - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

## ➢ மீள ஆரம்பித்தல்

1. கிளி/கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை தரம் 01 - 05 வரை மீள ஆரம்பித்தல் - மாகாண கல்விப் பணிப்பாளர் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

## ➢ க.பொ.த உயர்தர (விஞ்ஞான பிரிவு) ஆரம்பித்தல்

1. வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் (2018 ஆம் ஆண்டு அணி) - மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
2. வ/கோயில்குளம் இந்துக் கல்லூரி (2018 ஆம் ஆண்டு அணி) – நிராகரிக்கப்பட்டுள்ளது.

## ➢ தொழினுட்பப் பிரிவு ஆரம்பித்தல்

1. யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி - அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. யா/உடுத்துறை மகா வித்தியாலயம் - அனுமதி வழங்கப்பட்டுள்ளது
3. யா/ஹாட்லிக் கல்லூரி - அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மூன்று தொழினுட்ப ஆய்வுகூடம் அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதனால் கீழ்வரும் மூன்று பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டன.

1. மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்.
2. வ/புளியங்குளம் மகா வித்தியாலயம்.
3. யா/ஹாட்லிக் கல்லூரி.

## ➢ உட்கட்டுமான அபிவிருத்தி

### அண்மையிலுள்ள பாடசாலையில் சிறந்த பாடசாலைகள் செயற்றிட்டம்

செயலாளர் அவர்களினால் நான்கு பிரிவுகளில் செயற்றிட்டம் A,B,C,D என வகைப்படுத்தப்பட்ட அண்மையிலுள்ள பாடசாலையில் சிறந்த பாடசாலைகள் செயற்றிட்டம் தொடர்பிலான அறிக்கை சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. நான்கு வகையான திட்டங்களிலும் உள்ளடக்கியதாக 644 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

A பிரிவில் 58 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. முதலில் அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்காக 2 மில்லியன் ரூபா வழங்கப்படும். தொடர்ந்து 10 மில்லின் ரூபா கட்டடங்களை அமைப்பதற்கும் திருத்தவேலைகளை மேற்கொள்வதற்கும் வழங்கப்படும். தொடர்ந்து ஏனைய வள ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்டும்.

B பிரிவில் 76 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. புதிய வகுப்பறைகள் , ஆய்வு கூடங்கள் அமைக்கப்பட உள்ளன. இத் திட்டத்தில் இதுவரை காலமும் எத்திட்டத்திலும் உள்ளடங்காத பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

C பிரிவில் 56 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 1000 பாடசாலைகளில் உள்ளடங்கிய பாடசாலைகளுள் ஆய்வுகூடம் மட்டும் அமைக்கப்பட்டு ஏனைய வசதிகள் மேற்கொள்ளப்படாத பாடசாலைகளில் வகுப்பறை கட்டடங்கள் அமைப்பதற்காக, ஏனைய அபிவிருத்திகளிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

C பிரிவில் 454 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு மாடி வகுப்பறை கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இவ் வருடம் வடமாகாணத்தில் 50 பாடசாலைகளில் அமைக்கப்படவுள்ளன.

- ➢ வ/பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயம் எத்திட்டத்திலும் உள்ளடக்கப்படவில்லை – கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு எம.பி.நடராஜ்

### கணித, விஞ்ஞான, ஆங்கில பட்டதாரிகள் அசிரியர் நியமனம்

தமிழ் மொழி மூலம் கணிதம் 201, விஞ்ஞானம் 227, தமிழ் 141 ஆக மொத்தமாக 569 ஆசிரியர்களும் சிங்கள மொழி மூலம் கணிதம் 11, விஞ்ஞானம் 08, சிங்களம் 10 ஆக மொத்தமாக 29 ஆசிரியர்களுமாக மொத்தமாக 598 ஆசிரியர்கள் வட மாகாணத்தில் நியமிக்கப்படவுள்ளனர். ஏப்ரல் 23 ஆம் திகதி பரீட்சை இடம்பெற்று மே 10 ஆம் திகதி பெறுபேறுகள் வெளியிடப்பட்டு நியமனம் வழங்கப்படவுள்ளன.

அதிபர் வெற்றிடங்களிற்கும் நேர்முகத்தேர்வு கல்வி அமைச்சு, இசுறுபாயவில் நடைபெற்றுள்ளது. விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

SLEAS நியமனங்களும் விரைவில் இடம்பெறவுள்ளன. பிரதமரின் அறிவுறுத்தற்படி யூன் மாதத்திற்கு முன்னர் அனைத்து நியமனங்களும் இடம்பெற இருக்கின்றன.

கலைப் பட்டதாரிகளிற்கான அண்மைய நியமனத்தில் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் கடமையேற்கவில்லை என்பதுடன் சில ஆசிரியர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார் – வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.இ.இந்திரராசா.

சில பாடசாலைகளிற்கு நியமனம் வழங்கப்பட்ட போது இரு முஸ்லிம் ஆசிரியர்களிற்கு வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்திற்கு நியமனம் வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் பாடநெறியை கருத்திற் கொண்டு இடமாற்றம் வழங்கப்பட்டது. அதேபோல் வேறு இருவருக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட போது பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரம் இன்மையால் க.பொ.த. உயர்தர பாடத்திற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டதனால் இடமாற்றம் வழங்கப்பட்டது எனவும் இவ் ஆசிரியர்களினுடைய இடமாற்றங்கள் அமைச்சிற்கு உட்பட்டதே அன்றி வலயக் கல்விப் பணிப்பாளரிற்கு உட்பட்டதல்ல என செயலாளர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தூர இடத்திலிருந்து ஆசிரியர்கள் வடமராட்சி கிழக்கில் கடமையாற்ற முன் வருவதில்லை எனவும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட பலரிற்கு நியமனம் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதாகவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.ச.சுகிர்தன் அவர்கள் தெரிவித்தார்.

செயலாளர் அவர்கள் விண்ணப்பித்த அனைத்து பட்டதாரிகளினதும் ஆவணங்கள் பரிசோதிக்கப்படாமல் பரீட்சை எழுதுவதற்கு அனுமதித்ததுடன் நேர்முகத்தேர்விலேயே ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும் என ஏற்கனவே அறிவித்ததற்கிணங்க 111 வெற்றிடங்களிற்கு மூன்று மடங்காக 333 பட்டதாரிகள் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டதாகவும் அவர்களினுடைய தகவல்கள், ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். குறித்த சில வலயங்களிற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும் ஏனைய வலயங்களிற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும் எனவும் தற்போது நியமனம் வழங்கப்பட்டு கடமையேற்காதவர்களிற்கு பதிலாக நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். தீவக வலயத்தில் கடல் கடந்த தீவுகளில் உள்ள பாடசாலைகளிற்கு நியமனம் வழங்கப்பட்ட போதும் பலர் கடமையேற்காதமையினால் குறித்த பாடசாலைகளில் கடமையேற்க விருப்பம் தெரிவிப்பவர்களினை பத்திரிகை விளம்பரம் மூலம் கண்டறிந்து நியமனம் வழங்க உத்தேசித்தள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் கல்வியியற் கல்லூரி நியமனங்கள் அடுத்துவரும் மாதத்தில் இடம்பெறவுள்ளதனால் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பாடசாலைகளிலும் இதே நிலை நிலவுவதால் அங்கும் பத்திரிகை விளம்பரம் மூலம் விருப்பமானவர்களை கண்டறிந்து நியமனம் வழங்குமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.ச.சுகிர்தன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## 13 ஆம் ஆண்டுவரை மாணவர்கள் பாடசாலையில் கல்வியை தொடர வேண்டும்

கௌரவ கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அவர்கள் அண்மையில் வடமாகாண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு வழங்கிய 13 ஆவது திருத்த சட்டத்திலுள்ள கருத்துப்படி 13 ஆம் ஆண்டு வரை மாணவர்கள் கல்வியை பாடசாலையில் தொடருவதால் மாணவர்கள் சமூதாயத்தில் உயர்ந்து காணப்பட வாய்ப்புள்ளதுடன் ஒழுக்கச் சீர்கேடுகளையும் தவிர்க்க முடியும் எனவும் இதனை வட மாகாணத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் 2017 ஆம் ஆண்டு அமுல்ப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

Note Book இல்லாத வகுப்பறை தொடர்பில் மாணவர்கள் இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தி கல்வியை தொடர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

**வேறு விடயங்கள்**

1. வவுனியா கல்வி வலயத்தில் கடமையாற்றிய பல்வேறு குற்றச்சாட்டுகளிற்கு உட்பட்ட அதிபர் ஒருவரை வ/நெளுக்குளம் மகா வித்தியாலய அதிபர் வெற்றிட நேர்முகத் தேர்வில் அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு எம்.பி.நடராஜ் அவர்கள் தெரிவித்தார்
   செயலாளர் அவர்கள் அவருடைய குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் வேலையிலிருந்து இடைநிறுத்தப்படாமையினால் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டதாகவும் இறுதி முடிவு நேர்முகத் தேர்வின் அடிப்படையில் வழங்கப்படும்.
2. யா/புற்றளை மகா வித்தியாலய சிறுவர் விளையாட்டு முற்றம் அமைத்தல் - வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ சி.அகிலதாஸ் அவர்களின் கோரிக்கை தொடர்பில் ஏற்கனவே ஓர் மாடிக் கட்டடம் உட்பட இரண்டு கட்டடங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் நிராகரிக்கப்பட்டது.
3. யா/மணற்காடு றோ.க பாடசாலையை புதிய இடத்திற்கு மாற்றுதல் - அனுமதி வழங்கப்பட்டது.
4. யா/நாகர்கோயில் பாடசாலையை புனித நகர் பாடசாலையாக பெயர் மாற்றுதல் - வலயக் கல்விப் பணிப்பாளரூடாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. மு/பாரதி வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள இராணுவ முகாமை அப்புறப்படுத்தல் - உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் பிற்பகல் 01.00 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்